மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 115/24
வா.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்:முருகன்(எ)ஜெசிலுவன்ஸ் தேதி : 16.02.26
வயது : த/பெ : முத்துநாடார்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

**16.02.26 குறுக்கு விசாரணை**

1. என்னை இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க 1ம் வாதி ஜெயக்குமாரின் மனைவி அழைத்து வந்தார். நான் கடை வைத்துள்ளேன். ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். நான் இந்நீதிமன்றத்தில் வேறு வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் பொதுப்பாதைக்காக பொதுவில் போட்ட வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன். என் நிரூபணவாக்குமூலத்திற்கு நான்தான் விபரங்கள் சொன்னேன்.

2.வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் வழக்கறிஞர் தட்டச்சு செய்து கொடுத்ததை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஆம். ஆனால் அதில் உள்ளது உண்மைதான். வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சரியாக தெரியாது. வழக்கு சொத்தின் நீளம் மற்றும் அகலம் எவ்வளவு அடி என்றால்

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.16 10:07:22 +0530

தெரியாது. வழக்கு சொத்து என்ன வகைபாடு என்றால் நத்தம். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

3.வாதிகளின் சொந்த ஊர் எங்கள் ஊர் என்றால் சரிதான். வாதிகள் என்ன படித்துள்ளார்கள் என்றால் தெரியாது. வாதிகள் பெயரில் பட்டா எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லும் உயிலை படித்து பார்த்துள்ளேன். அதில் வழக்கு சொத்தின் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த உயில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நிரூபணவாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள எல்கைமால்கள் வாதிகள் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் நான் சொல்லி தட்டச்சு செய்யபட்டது.

4.நான் சொல்லி எல்கை மால்கள் தட்டச்சு செய்யப்பட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்துபார்த்துள்ளேனா என்றால் இல்லை. அதில் எல்கை மால்கள் குறிபிடப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. நான் சொல்லியுள்ள எல்கைமால்களுக்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5.வழக்கு சொத்தின் சர்வே எண் 1102A ஆகும். செல்லக்கனி பெயரில் பட்டா உள்ளதா அல்லது இல்லையா என்று வாதிகள் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் ஊரில் நடக்கும் நல்லது கெட்டது நிகழ்ச்சிகளுக்கு வருவார்கள் என்றால் சரிதான். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதால்

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.16 10:07:29 +0530

வருவாய் துறை ஆவணத்தை பார்த்தால் யார் இடம் என்று சொல்லமுடியும் என்றால் முடியும்.

6.என்னிடம் காண்பிக்கப்படும் நத்தம் புல எண் 1102A/53 க்கான நத்தம் பட்டா செல்லக்கனி பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நத்தம் பட்டாவின் இணையவழி நகல் பி.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் நத்தம் புல எண் 1102A/53 க்கான நத்தம் பட்டா செல்லக்கனி, சுமதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நத்தம் பட்டாவின் இணையவழி நகல் பி.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புல எண் 1102A/53 உயில் மூலம் வாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7.பிரதிவாதிகள் கட்டிய வீட்டின் புதுமனை புகுவிழா நிகழ்ச்சிக்கு வாதிகள் வந்தார்கள் என்றால் வரவில்லை. பிரதிவாதிகள் கட்டிய வீட்டின் புதுமனைபுகுவிழா நிகழ்ச்சியில் வாதிகள் கலந்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. தாவா வழக்கு சங்கதிகள் தெரியாமல் வாதிகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN

Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.16 10:07:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.